**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.04.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கோடைக் கால நீச்சல் பயிற்சிமுகாம் துவக்கம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இந்த ஆண்டு கோடைக்கால நீச்சல் பயிற்சி ஏப்ரல் 23 ஆம் தேதி அன்று துவங்க உள்ளது இப்பயிற்சியினை பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் வெ. கீதாலட்சுமி அவர்கள் துவக்கிவைக்க உள்ளார். மூன்று ஆண்டு கால இடைவெளிக்குப்பின்பு, கோடைக்கால விடுமுறையை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் அனைவருக்கும் நீச்சல் பயிற்சி நடத்தபட உள்ளது.

இந்த ஆண்டு ஏப்ரல் 23 முதல் ஜீன் 21 ஆம் தேதி வரை தினமும் காலை 7 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை மாணவர்கள் மற்றும் குழந்தைகளுக்கும் பின்பு பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது. ஐந்து வயதுக்கு மேல் உள்ள அனைவரும் பங்கேற்று பயிற்சி பெறலாம்.

இந்த பயிற்சியில் பங்கு பெற விருப்பமுள்ளவர்கள் பல்கலைகழக உடற்கல்வி துறையில் தங்கள் பெயர்களை பதிவு செய்து பயன் பெறலாம். இத்தகவலை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் நல முதன்மையர் முனைவர். தி. ரகுசந்தர், அவர்கள் தெரிவித்தார்கள். மேலும் தகவல் அறிய 9486775495 / 0422 6611279 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்